ஓம் ஸ்ரீ சாயிராம் பிரசாந்தி சந்தேஷ் வினா விடை நேரம் வினா எண் 322

தலைப்பு தினசரி வாழ்க்கையில் செயல்படுத்தபட வேண்டிய வேதாந்த நெறிகள்.

நம் அன்புக்குறிய பேராசிரியர் திரு அனில்குமார் சாயிராம் சார் அவர்களின் சத்யோபனிஷத் புத்தகம் வால்யூம் ஒன்று பக்கம் 159-165லிருந்து தேர்வு செய்யபட்ட வினா விடை பகுதி

கேள்வி: ஸ்வாமி

வேதாந்தம் என்றால் என்ன என்று எங்களுக்கு எடுத்து சொல்ல வேண்டுகிறோம் ஸ்வாமி.

ஸ்வாமியின் பதில்:

வேதம் என்பது சிருஷ்டியின் இரட்டை தன்மை யை விளக்குகிறது.

வேதாந்தமோ சிருஷ்டியின் ஏகத்துவத்தை பற்றி கூறுகிறது.

பாலிலிருந்து தயிரும் அதிலிருந்து வெண்ணெயும் அதிலிருந்து நெய்யும் கிடைக்கிறது.

இந்த நெய்யை தொடர்ந்து சூடுபடுத்தினாலும் அது நெய்யாகவே இருக்கும்.நிலை மாறாது.

அதாவது பால் பல்வேறு செயல்முறைகளுக்கு உட்படுத்தபடும் போது நெய்யாகிறது.

நெய் என்பதே இறுதி நிலையாகும்.

இங்கே பாலாக இருப்பது இரட்டை நிலையையும் நெய்யாகும் போது ஏகத்துவத்தையும் குறிக்கின்றது.

அடுத்த கேள்வி:

ஸ்வாமி வேதாந்தத்தின் மூன்று சித்தாந்தங்களான த்வைதம் விசிஷ்டாத்வைதம் அத்வைதம் இவை ஒன்றுக்கொன்று முரண்பட்டவையாக தோன்றுகிறதே.

ஒன்று மற்றொன்றிற்கு எதிரான கருத்தை போதிக்கிறதா ஸ்வாமி.

ஸ்வாமியின் பதில் :

பொதுவாக மனிதர்களால் அவ்வாறாகவே புரிந்து கொள்ள படுகிறது.

ஆனால் உண்மையில் அப்படியல்ல.

இவை மூன்றும் ஒன்றை ஒன்று சார்ந்தவயே தவிர முரண்பட்டவை அல்ல.சொல்லபோனால் ஒன்றின் நீட்சியே மற்றொன்றாகும்

உதாரணத்திற்கு கரும்பிலிருந்து கரும்பு சாறு எடுக்கப்பட்டு அதை சுத்திகரித்து சர்கரையும் தயாரிக்கப்படுகிறது.கரும்பாக இருக்கும் போது அது இரட்டை தன்மை கொண்டதால் த்வைதத்திற்கு ஒப்பிடலாம்.கரும்பு சாறு என்பதை விசிஷ்டாத்வைதம் என கொள்ளலாம்.

இறுதி நிலையான சர்க்கரையே அத்வைதம் என படுகின்ற ஏகத்துவ நிலையாகும்.இந்த சர்க்கரையை விரும்பும்படி உபயோகித்து கொள்ளலாம்.சர்கரை என்பது கரும்பின் மாறாத இறுதி நிலையாகும்.

அடுத்த கேள்வி:

ஸ்வாமி பிறந்து விட்ட எவருமே விதியின் பிடியிலிருந்து தப்பிக்க முடியாது.நிகழ வேண்டிய அனைத்துமே கடவுளால் முன்கூட்டியே தீர்மானிக்க பட்டு விட்டதால் அவை அவ்வாறாக அந்த அந்த நேரத்தில் நிகழ்ந்தே தீரும்.இந்த கடவுளின் விதியானது யாராலுமே மாற்றபட முடியாதது என்பதால் நாங்கள் உலக வாழ்க்கையில் துன்பப்படுகின்றோம்.இந்த விதி என்பதிலிருந்து தப்பிக்க வழி ஏதும் உண்டா ஸ்வாமி.

ஸ்வாமியின் பதில்:

உங்களின் முந்தய பிறவிகளில் உங்கள் மனதில் ஏற்பட்ட எண்ணங்களும் அதன் பொருட்டு நீங்கள் செய்த செயல்களும் இந்த பிறவியில் தொடர்கின்றன.

உங்களின் தீய செயல்கள் யாருக்கும் தெரியாது என நீங்கள் எண்ணி கொள்ளலாம்.ஆனால் உங்களுக்கு உள்ளயே உறைகின்ற கடவுள் உங்களுடைய உணர்வுகள் எண்ணங்கள் செயல்கள் அனைத்தையும்அறிவார்.கடவுள் எங்கும் இருக்கிறார்.அவரிடமிருந்து எதையும் நீங்கள் மறைத்து விட முடியாது.ஒரு நாள் இல்லாவிட்டால் ஒரு நாள் நீங்கள் செய்த தீய செயல்களின் பலன்களை நீங்கள் அனுபவித்தே

ஆக வேண்டும்.

உங்கள் துன்பங்களுக்கு நீங்கள் மற்றவர்களை காரணம் கூறலாம்.ஆனால் உண்மை என்னவென்றால் உங்களுடைய முந்தைய பிறவியின் தீய எண்ணங்களும் அதனால் விளைந்த தீய செயல்களுமே இந்த பிறவியில் நீங்கள் அனுபவிக்கின்ற துன்பங்களுக்கு காரணமாகும்.

மனிதனின் ஒவ்வொரு செயலுக்கும்  உள்உறையும் கடவுள்  சாட்சியாக மட்டுமே இருக்கின்றார்.

கடவுள் இந்த உலதத்தை படைத்து மனிதனுக்கு கொடுத்த போது ஒரே ஒரு  நிபந்தனை மட்டும் விதித்தார்.பூமியின் நலங்களையும் வளங்களையும் மனிதன் அனுபவிக்கலாம்.அதே சமயம் அவனுடைய ஒவ்வொரு செயலுக்கும் உண்டான எதிர் வினையை அவனே அனுபவிக்க வேண்டும் என விதித்தார்.கடவுள் ஒரு தபால்காரர் போல.கடிதங்களில் எழுதபட்டுள்ள விஷயங்களை பற்றி அவருக்கு கவலை இல்லை.அது கடிதத்தை எழுதியவர் மற்றும் பெருபவர் சம்பந்தபட்டதாகும்.ஒரு திருமண அழைப்பிதழை

பெறும் போது நீங்கள் தபால்காரருக்கு அன்பளிப்பு ஏதும் தருவதில்லை.அது போல் பயமுறுத்தல் கடிதம் வந்தாலும் தபால்காரரை கடிந்து கொள்வதில்லை

அவருடைய வேலை தபாலை உரிய விலாசத்தில் சேர்ப்பது மட்டுமே.அதுவே கடவுளின் வேலை.

ஆனால் இறைவனிடம் இறைஞ்சி பிரார்தனை செய்தால் அது விதியினால் ஏற்படுகின்ற துன்பங்களை துணிவுடன் தாங்கி கொள்ளும் சக்தியை கொடுக்கும்.

மனமுருகிய பிரார்த்தனை, திடமான நம்பிக்கை, ஆழ்ந்த பக்தி,செய்து விட்ட பாவத்திற்காக மனம் வருந்துவது,இறைவனின் கருணைக்காக ஏங்கி இருப்பது இவ்வாறெல்லாம் செய்தால் கடவுள் தானே விதித்திருந்தாலும் தன்னுடைய முடிவை மாற்றிக் கொண்டு விதியின் விளைவை போக்கி அருளுவார்.

மார்க்கண்டேயன் விஷயத்தில் அது தானே நடந்தது.விதி அவனுக்கு கொடுத்திருந்த வாழ்நாள் பதினாறு வருடங்கள் மட்டுமே.ஆனால் சிவ பெருமானிடம் அவன் கொண்டிருந்த அதீத பக்தியால் அவனுக்கு இறவா வரம் கிடைத்தல்லவா.

மார்க்கண்டேயனுடைய ஆழ்ந்த பிரார்தனையினால் கடவுள் தான் விதித்திருந்த முடிவையே மாற்றி கொள்ளும்படியாயிற்று.

வேறு ஒரு உதாரணமும் பார்ப்போம்.சிறை தண்டனை அனுபவிக்கும் கைதிக்கு அவருடைய நன்னடத்தைக்காக தண்டனையின் கால அளவு குறைக்கப்படுகிறது அல்லவா.

மரண தண்டனை பெற்ற கைதி ஜனாதிபதிக்கு கருணை மனு அனுப்பினால் அந்த தண்டனையே ரத்தாகிவிடுகிறது அல்லவா.

அது போல் விதிப்படி நீங்கள் துன்பங்களை அனுபவிக்க வேண்டும் என்று இருந்தாலும் உங்களின் மனமார்ந்த பிரார்த்தனையினால் இறைவன் அந்த விதியை மாற்றி உங்களை காப்பாற்றுகிறார்.உங்களின் ஒரு முகமான பிரார்த்தனையின் காரணமாக  கடவுள் மனமிரங்கி  உங்டளுக்கு சிறப்பு அருள் பாலிக்கின்றார்.

அடுத்த கேள்வி: ஸ்வாமி பகவத் கீதை, செயல்களின் பலனை இறைவனுக்கு அர்பணித்துவிட வேண்டும் என கூறுகிறது.தீய செயல்களின் பலனை எங்கள் இறைவனாகிய உங்களுக்கு அர்பணிப்பதை எங்களால் நினைத்துகூட பார்க்க முடியாது .ஏனென்றால் நாங்கள் மிக அபூர்வமாகவே நல்ல செயல்கள் செய்கின்றோம்.அப்படி இருக்கையில் நாங்கள் என்ன தான்  செய்வது ஸ்வாமி.

ஸ்வாமியின் பதில்

உங்கள் செயல்களின் பலன்களை நீங்கள் இறைவனுக்கு அர்பணித்து விட வேண்டும்.அது துன்பமோ இன்பமோ அவைகளில் நீங்கள் மூழ்கி விட கூடாது.இறைவன் இன்ப துன்பங்களுக்கு அப்பாற்பட்ட இரட்டை நிலையை கடந்த

ஏகத்துவமானவர்.எப்படிப்பட்ட அசுத்தமான நீராயினும் அது கங்கையில் கலந்தால் அதனால் கங்கை மாசடையாது.

அது போல் நெருப்பில் போடப்படுகின்ற எல்லா பொருட்களுமே பஸ்பமாகிவிடுகின்றன.

போடப்படும் பொருட்களின் தன்மை நெருப்பிற்கு எந்த பாதிப்பும் ஏற்படுத்துவதில்லை.

எனவே நல்லது கெட்டது என்று எதை நீங்கள் இறைவனுக்கு சமர்பித்தாலும் அதனால் இறைவன் பாதிப்படயப்போவதில்லை.மாறாக அது உங்களுக்கு நன்மையையே விளைவிக்கும்.

உதாரணமாக உங்கள் சட்டை பையில் ஐந்நூறு ரூபாய் நோட்டுகள் இருப்பதாக வைத்து கொள்வோம்.நீங்கள் வெளியே எங்கு செல்ல நேரிட்டாலும் கவனமுடன் அந்த நோட்டுகளை பத்திரப்படுத்தி கொள்வீர்கள்.

ஆனால் அதையே வங்கியில் கட்டிவிட்டால் அது உங்கள் கணக்கில் சேர்ந்து விடும்.அது போல் நீங்கள் செய்கின்ற நற்செயல்களின் பலன்களை நீங்கள் இறைவனுக்கு அர்பணித்து விட்டால் அது இறைவனிடமுள்ள கணக்கில் வரவு வைக்கப்படும்.நீங்களும் அதை பற்றி கவலைபடாமல் மறந்து விடலாம்.

அதனால் நீங்கள் இறைவனுக்கு நன்றி தெரிவித்து அடக்கமுடன் இருப்பீர்கள்.

மாறாக நீங்கள் நாம் தான் அனைத்தையும் செய்கிறோம் என்று எண்ணத் தொடங்கினால் தற்பெருமையும் அகந்தையும் ஏற்படும்.அதனால் தான் செயல்களின் பலன்களை இறைவனுக்கு அர்ப்பணிக்க வேண்டும் என்று சொல்லப்படுகிறது.

சரி நல்லது கெட்டது இவைகளை இறைவனுக்கு எவ்வாறு அர்பணிப்பது.

உங்களிடம் கிழிந்த ஐநூறு ரூபாய் நோட்டு இருந்தால் அதை வங்கியில் கொடுத்து மாற்றி கொள்ளலாம்.அது போல் உங்களின் செயல்களின் பலன்களை அது கெட்ட செயலாக இருந்தாலும் இறைவனின் ரிசர்வங்கியில் அர்ப்பணிக்கும்போது அது மாற்றபடுகிறது.

அடுத்த கேள்வி:

ஸ்வாமி மனித மனத்தினால் உணரப்படுகின்ற உலகியல் அனுபவங்கள் எல்லாம் இரட்டை தன்மை கொண்டவையே

இன்பம் துன்பம் போன்ற உணர்வுகளுக்கு காரணம் மனித மனமே.மனம் என்பது ஓர் பித்து பிடித்த குரங்கு என்று ஸ்வாமி கூறுகிறார்.இந்த மனதை ஒரேயடியாக இல்லாமல் செய்வதுவிடுவது எப்படி என்று எங்களுக்கு சொல்லி தாருங்கள் ஸ்வாமி.

ஸ்வாமியின் பதில்:

மனம் என்பது அதுவாகவே உங்களுக்கு கஷ்டங்கள் கொடுப்பதில்லை.மனதை நீங்கள் எப்படி உபயோகப்படுத்துகிறீர்கள் என்பதை பொறுத்தே எல்லாம் அமைகிறது.மனம் என்பது எங்கும் நிறைந்திருக்கிறது.அதற்கு இறப்பு என்பதே கிடையாது.எதை பற்றி நினைக்கிறதோ அந்த உருவத்தை அது எடுத்து கொள்கிறது.அதனால் தான்

மனோமூலமிதம் ஜகத் அதாவது மனமே உலகமாகும் என கூறப்படுகிறது.எனவே மனதை இல்லாமல் செய்துவிடுவது என்பது நடக்காது.மாறாக மனதை மனோலயமாக அதாவது தெய்வீகத்துடன் கலந்து ஒன்றிணையும்படி செய்து விட வேண்டும்.நதி கடலுடன் கலப்பது போல் மனம் தெய்வீகத்துடன் இரண்டற கலக்க வேண்டும்.

கடவுளிடம் சரணடைந்துவிட்ட மனமே ராமதாஸ் அதாவது கடவுளின் சேவகனாகும்.

இச்சைகள் நிரம்பிய மனமோ காமதாஸ் அதாவது புலன்களின் சேவகனாகும்.

மனமானது பொன் பொருள் நட்பு என ஆசைகளால் அலைபாயாமல் எப்போதும் இறை சிந்தனையிலேயே ஈடுபட்டு இருக்க வேண்டும்.அப்போது தான் மனமே இறைவனாக முடியும்.

அனைவருக்கும் நன்றி வர இருக்கின்ற நாட்களில் நம் ஸ்வாமி யின் அருளுரைகளை தொடர்ந்து கேட்டு மகிழ்வோம்